கூறுகள் அங்கே இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது நமக்கு வந்துள்ள கடிதத்தில், இந்த நிறுவனம், திட்டத்தைச் செயல்படுத்த இயலாவிட்டால் இங்கே அதை விஸ்தரித்துத் தருவதற்கு முயற்சிக்கலாம் என்று இப்போது மைய அரசு எழுதியுள்ளது. பொதுவாக, தென்னகப் பகுதிகளில் நடைபெறுகின்ற, நடைபெறவேண்டிய பல்வேறு தொழிற் திட்டங்களுக்கு சில நேரங்களில் உத்திரப் பிரதேசம் இவ்வாறெல்லாம் குறுக்கே நிற்கிறது. நாம் என்ன செய்ய இயலும்?

9-15 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவிதமான உதவிகளும் உதகையில் இருக்கின்ற நேரத்தில், " உத்திரப் பிரதேசத்தில்தான் நாங்கள் இதை அமைக்க இருக்கிறோம் ; அது முடியாது என்று சொன்னால்தான் தமிழகத்தில் அமைப்போம் " என்று மத்திய அரசு சொல்கிறது. அதை வலியுறுத்துகின்ற அளவுக்கு — உதகையிலேதான் ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்த அவையிலே தனியாக ஒரு தீர்மானம் போட்டும், அதே நேரத்தில், இந்தத் தொழிற்சாலை தமிழகத்தில் துவக்கினால், அதனுடைய மதிப்பீடு என்ன இருக்கும்; எத்தனைப் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அரசு அறிவிக்குமா என்றும் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில், இன்று வளர்ந்து வருகின்ற விஞ்ஞானப் புதுமையில், அதிகம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க இடம் இல்லை. ஏனென்றால், அது ஒரு சினிமா வண்ணப்படத் தொழில்தான். அதனால் நூற்றுக்கணக்கானவர்களுக்குத் தான் வேலைவாய்ப்புக் கொடுக்க இயலும். இருந்தாலும், இதற்காக ஒரு தீர்மானம் போடுவதை விட, இன்னும் பெரிய பெரியத் தொழிற்சாலைகள் எல்லாம் வேண்டி, மத்திய அரசோடு நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் சேர்த்து ஒரு தீர்மானம் போடலாம். குறிப்பாக, ' ஆரோமேடிக் ' போன்ற தொழிற்சாலைகளைப் பற்றி அன்றைக்குக் கூட அவையிலே பேசப்பட்டது. அந்தத் தொழிற்சாலைகளெல்லாம் தமிழகத்திற்கு வர வேண்டுமென்று நாம் உறுதிப்பாட்டோடு மத்திய அரசை வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

செனட் சிண்டிகேட் உறுப்பினர்.

*2622—திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக் கழக செனட் சிண்டிகேட் உறுப்பினர் இரு முறைக்கு மேல் இருக்லாகாது என்ற சட்டத்தை அரசு ரத்து செய்யுமா ?

1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே,

1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்டத்தின் மூலம், அனைத்து பல்கலைக் கழகங்களின் அமைப்புகளிலும், உறுப்பினர் ஒருவர் இரு முறைக்கு மேல் உறுப்பினர்களாக இருக்கலாகாது என்ற பிரிவு அண்மையில் நீக்கப்பட்டுவிட்டது.

பவானிசாகரில் சுற்றுலா மையம்.

*878—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகரில் சுற்றுலா மையம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) ஆகவே, இக்கேள்வி எழவில்லை.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகரிலே ஒரு சுற்றுலா மையம் அமைக்க வேண்டும் என்று ஏற்கெனவே இதற்கு முன்னாலே இருந்த அமைச்சர்கள் எல்லாம் அறிவித்திருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட, ஒரு வாரத்திற்கு முன்பு அறிவித்தார்கள். எல்லோரும் அங்கே இன்முகத்தோடு இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவிலேயே அந்தத் திட்டத்தை உருவாக்க முன் வர வேண்டும்; அமைச்சர் அவர்களே, அங்கு வந்து நேரடியாக பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் எப்போது வருவார்கள் என்ற ஏக்கத்திலே நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். அதோடு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள் கேட்கும் கேள்வி, அமைச்சர் அவர்கள் எப்போது வருவார்கள்—அது தானே?

திரு. வி. கே. சின்னசாமி: தாங்கள்கூட மணி விழா எடுத்தவுடன் வருவதாக அறிவித்திருக்கிறீர்கள்.